V

# முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10 x 1 = 10

1. பறவைகள் ________ பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
2. பள்ளிக்குச் சென்று கல்வி ________ சிறப்பு.
   அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
3. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை
4. இடம் + எங்கும் - என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________.
   அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும் இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:**

5. எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________.
6. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ________ மதிக்கின்றனர்.

**இ) பொருத்துக:**

7. வையம் - துன்பம்
8. பிணி - மேகம்
9. முகில் - பாட்டு
10. செய்யுள் - உலகம்

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளி: (ஏதேனும் ஐந்து மட்டும்)** 5 x 2 = 10

11. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
12. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.
13. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
14. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என சியாட்டல் கூறுகிறார்?
15. சான்றோர்க்கு அழகாவது எது?
16. நோயின் மூன்று வகைகள் யாவை?
17. எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று மட்டும்)** 3 x 4 = 12

18. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.
19. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
20. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
21. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
22. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

**ஊ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** 1 x 5 = 5

23. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
24. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

எ) பின்வரும் கவிதைப்பகுதியை அடிமாறாமல் எழுதுக: 4 + 2 = 6

25. ‘உடலின் உறுதி உடையவரே’ - எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடலை எழுதுக.

26. ‘படும்’ - என முடியும் திருக்குறளை எழுதுக.

ஏ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 5 x 1 = 5

27. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

அ) கோழி _______. (கூவும் / கொக்கரிக்கும்)

ஆ) பூ _______. (கொய் / பறி)

28. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

29. அடிக்கோடிட்ட எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16. _______.

ஆ) உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் 216. _______.

30. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) பேசினாள் - _______.

ஆ) கேட்டார் - _______.

31. உவமைத் தொடரைப் பயன்படுத்தி தொடர் அமைக்க.

உடலும் உயிரும் போல

ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி: 1 x 6 = 6

32. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

33. ‘வெட்டுக் கிளியும் சருகுமானும்’ - கதையைச் சுருக்கி எழுதுக.

ஒ) கடிதம் / கட்டுரை எழுதுக: 1 x 6 = 6

34. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) *நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்*

முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை

******